ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பள்ளப்பட்டி

எட்டாம் வகுப்பு - அறிவியல் அலகு-16 நுண்ணுயிரியல்

**I.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-**

1. நுண்ணுயிரிகள் ________ல் அளவிடப்படுகின்றன.

   அ. செமீ ஆ. மிமீ இ. மைக்ரான் ஈ. மீட்டர்

2. உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளின் பண்புகளைப் பெற்றவை

   அ. புரோட்டோசோவா ஆ. வைரஸ் இ. பாக்டீரியா ஈ. பூஞ்சை

3. _______ ஒரு புரோகேரியோட்டிக் நுண்ணுயிரியாகும்.

   அ. வைரஸ் ஆ. ஆல்கா இ. பூஞ்சை ஈ. பாக்டீரியா

4. பாக்டீரியாக்கள் வடிவத்தின் அடிப்படையில் _____ பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன

   அ. 2 ஆ. 3 3. 4 4. 5

5. மனிதருக்கு சாதாரண சளியை உண்டாக்கும் நுண்ணுயிரி ____ என அழைக்கப்படுகிறது.

   அ. பிளாஸ்மோடியம் ஆ. இன்ஃபுளுயன்ஸா

   இ. விப்ரியோ காலரே ஈ. ஆப்தோவைரஸ்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:-**

1. ______________________________ பூஞ்சையிலிருந்து தயாரிக்கப்படுவது பெனிசிலின் என்றழைக்கப்படுகிறது.

2. ________________________ என்பவை நோய்த் தொற்றுடைய புரதத் துகள்களாகும்.

3. செல்லுக்கு வெளியே காணப்படும் வைரஸ்கள் ___________________ எனப்படுகின்றன.

4. நுண்ணுயிரிகளை ____________________ன் உதவியுடன் காணமுடியும்.

5. ஒரு முனையில் கசையிழைகளைப் பெற்ற பாக்டீரியாக்கள் ஆக ____________________________________ வகைப்படுத்தப்பட்டுள்ளன.

விடைகள்:-

பெனிசிலியம் கிரைசோஜீனம் ஒருமுனை கற்றைக்கசையிழை

விரியான்கள் நுண்ணோக்கி பிரியான்கள்

LIVEWORKSHEETS

## III. சரியா? தவறா? என எழுதுக:-

1. நோயுண்டாக்கும் நுண்ணுயிரிகள் நோய்க்கிருமிகள் என அழைக்கப்படுகின்றன.

2. பெண் அனோபிலஸ் கொசுக்கள் டெங்கு வைரஸ் கிருமிகளைப் பரப்புகின்றன.

3. சின்னம்மை ஒரு தொற்று நோயாகும்.

4. சிட்ரஸ் கேன்கர் பூச்சிகளல் பரவுகிறது.

5. ஈஸ்ட் அதிக அளவில் ஆல்கஹாலை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது.

## IV. பொருத்துக:-

| | | |
|---|---|---|
| 1.நைட்ரஜனை நிலைப்படுத்தும் பாக்டீரியா | - | தடுப்பூசி |
| 2.காசநோய் | - | பிரியான் |
| 3. குரு | - | லேக்டோபேசில்லஸ் அசிடோபிலஸ் |
| 4. புரோபயாட்டிக்ஸ் | - | பாக்டீரியா |
| 5. எட்வர்ட் ஜென்னர் | - | ரைசோபியம் |

LIVEWORKSHEETS